DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.39/2025**

Deposition of Witness : PW-1 (மனுதாரர்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரமோத். | Father's Name | : | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 20.01.2026

சாட்சி இன்று அழைக்கப்பட்டு Ms.S.Shanthi (Examiner) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை– தொடங்கப்பட்ட நேரம் : 12.37 பி.ப – 12.45 பி.ப

நான் இம்மனுவின் மனுதாரர். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைகள் தான், அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். நான் என் தரப்பில் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணங்கள் **ம.சா.ஆ–1** முதல் **ம.சா.ஆ–6** வரை குறியீடு செய்யப்படுகிறது.

மனுப்படி தீர்ப்பாகுமாறு பிரார்த்திக்கிறேன்.

(ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 ஆவணங்கள் அசல் மனுவில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள், ம.சா.ஆ.5 மற்றும் ம.சா.ஆ.6 ஆவணங்கள் உரிமையியல் நடைமுறைச்சட்ட கட்டளை 7 விதி 14(3)ன் படியாக மனுதாக்கல் செய்யப்பட்டு, மனு

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.01.20 15:08:38 +0530

அனுமதிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. ம.சா.ஆ.5, ம.சா.ஆ.6 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:** 02.31 பி.ப – 02.45 பி.ப

சம்பவத்தன்று எதிர்மனுதாரர் அவரது மனைவி அவர்களது 5 வயது 2 வயது குழந்தைகளுடன் வந்தார் என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதி போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதி என்றால் சரிதான். எனது தந்தை என்ன புகார் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்ன நடந்தது என்று என்னிடம் கேட்ட பிறகுதான் புகார் கொடுத்தார். எனது தந்தையிடம் நான் சொன்ன விபரத்தை போலீசாரிடம் எனது தகப்பனார் சொன்னார். மேற்படி வாக்குமூலத்தை எனது தந்தை எனது முன்பாகத்தான் போலீசாரிடம் கூறினார். எனது தந்தை அளித்த புகாரின் அடிப்படையில் மேற்படி புகாரனது சங்கதிகள் பிழையுடையதாக வீரபாண்டி காவல் நிலையத்தினலால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு மேற்படி குற்ற இறுதியறிக்கையானது RCS 5304/2024 என தேனி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கடந்த 31.07.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு மேற்படி மனுவில் எனது ஆட்சேபனையை தெரிவிக்க இது வரை 11 வாய்தாக்கள் ஏற்பட்டு நான் இது வரை நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரம் குறித்து இந்த எதிர்மனுதாரர் இந்த மனுவில் எதிருரை தாக்கல் செய்த கடந்த 07.09.2025 அன்றே எனக்கு தெரியும் என்றாலும் தெரியாது என்று பொய்யாக கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்தானது எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை என்றும் எனவே, நான் தாக்கல் செய்த ம.சா.1 ஆனது செல்லும்தன்மை அற்றது என்றாலும் இந்த எதிர்மனுதாரர் எனக்க யாதொரு இழப்பீடும் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.5, ம.சா.ஆ.6



SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.01.20 15:08:43 +0530

ஆவணங்களை பொறுத்து நான் சைக்கிள் வாங்கியதற்கான பில் இல்லை என்றாலும் சைக்கிளை சரி செய்தற்கான பில் இல்லை என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.5, ம.சா.ஆ.6 ஆவணங்களுக்கும் நான் சொன்ன சைக்கிளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 ஆவணம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 ஆவணம் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது கவனக்குறைவினால் ஏற்பட்டது என்றும் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு முழு காரணம் என்னுடைய கவனக்குறைவு என்றாலும் அதனால் நான் இழப்பீடு தொகை கோருவதற்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.01.20 15:08:48 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 20.01.2026